1974 சனவரி 23]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மாநிலத்தினுடைய தேவை அதிகரிக்கும்பொழுது மத்திய அரசுக்கு நாம் இது சம்பந்தமாக எழுதி அந்தத் தேவையை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம். மத்திய அரசு நமக்கு எந்த உத்தரவாதமும் அளிக்க முடியாது. ஏனென்றால் மத்திய அரசுக்கே மற்ற நாடுகளிலேயுள்ள சர்க்கார்கள் உத்தரவாதம் அளிக்க முடியாத நிலைமை இந்த பெட்ரோலியம் பொருட்களிலே இருப்பதால் அவர்கள் நமக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டு மென்று கூறுவது நியாயமாகாது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தனியார் பேருந்துகளில் பணியாற்றியோர்

*118 **வினா—திரு. எ. சுவாமிதாஸ்:** மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தனியார் பேருந்துகள் ஓடிக்கொண்டிருந்த வழித் தடங்களை அரசு போக்குவரத்துத்துறை எற்றெடுத்து தேசியமாக்கிய பின்னர், அதன் காரணமாக வேலை யிழந்தவர்களுள் எத்தனை பேர் வேலை கேட்டு விண்ணப்பித் துள்ளனர் ?

(இ) அவர்களுக்கு எப்போது வேலையளிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) 61 பேர்கள் வேலைக்கு விண்ணப்பித்துள்ளனர்.

(இ) அதில் 36 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

திரு. எ. சுவாமிதாஸ் : தலைவரவர்களே, எஞ்சியுள்ளவர் களுக்கும் வேலை அளிக்க அரசு முற்படுமா? தனியார் துறை போக்குவரத்துத் துறையில் பணியாற்றி அரசுத் துறையில் பணி யாற்ற வருபவர்களுக்கும் அவர்கள் ஓய்வு பெற்ற பிறகு ஓய்வுகால ஊதியமும், மற்ற சலுகைகளும் வழங்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, 61 பேர்களில் 51 பேர்கள்தான் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டு வந்தார்கள். அவர்களில் 15 பேர்கள் தாங்கள் தனியார் நிறுவனங் களில் வேலை செய்தவர்கள் என்று நிரூபிக்க முடியாமல் போனதால் அவர்களை எடுக்க முடியவில்லை. ஆகவே 36 பேர்கள்தான்

எடுக்கப்பட்டார்கள். ஓய்வு ஊதியத்தைப் பொறுத்த வரையில் தனியார் துறையில் இருக்கும் வரையில் ஓய்வு ஊதியம் பெறுவதற்கு தகுதியற்றவர்களாகத்தான் இருப்பார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, பல கம்பெனி களிலிருந்து அவர்கள் அரசாங்கத்திற்கு மனுச் செய்தார்கள். அந்த கம்பெனியாளர்கள் தகுந்த சான்றுகளைக் கொடுத்திருக்கி ருர்கள் என்ற அடிப்படையிலே அவர்களுக்கு வேலை கொடுக்க முன்வருமா? ஏதோ 15 பேர்கள் நிரூபிக்க முடியவில்லை என்று கூறுகிருர்கள். இது சம்பந்தமாக அரசாங்க ஏடுகள் பரிசோதனை செய்யப்பட்டனவா என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, தனியாரிடத்திலேயிருந்து சில சமயங்களிலே யார் வேண்டுமானாலும் சர்ட்டிபிகேட் வாங்கி வந்துவிட முடியும். ஆனால் அவர்களுக்காக ஏற்கனவே அந்த சர்வீஸ் ரோல் அல்லது பிராவிடெண்ட் ஃபண்ட் ஏதாவது கட்டியிருக்கிருர்களா என்று ஆராய்ந்து பார்த்துத்தான் எடுக்கப்படுகிருர்கள். அந்த வகையிலே Fifteen have been rejected due to their failure to establish their *bona fides*' என்ற தகவல் எனக்குக் கிடைத்திருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, நிரூபிக்க இயலாத காரணத்தால் அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க முடியவில்லை என்று அமைச்சரவர்கள் கூறினுர்கள். நாம் மாதந்தோறும் ஆயிரக் கணக்கான புதிய நியமனங்களைச் செய்கிருேம். ஏற்கனவே அவர்கள் நிரூபிக்க முடியவில்லை என்ருலும் கூட உண்மையிலேயே பழைய கம்பெனிகளில் வேலை செய்த தொழிலாளர்களை அரசாங்கம் தயவு கூர்ந்து மீண்டும் அரசாங்கத்தில் அமர்த்த ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, போதிய தகுதியுடையவர்களாக இருந்தால் எல்லோரையும் போல அவர்களும் வேலையிலே கட்டாயம் நியமனம் பெறுவார்கள். ஆனால் மாண்புமிகு அங்கத்தினர் குறிப்பிட்டதைப்போல ஆயிரக்கணக் கான நியமனங்கள் நடப்பதாக எனக்குத் தகவல் இல்லை.